1982 [செப்டம்பர் 8]

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநா அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) கடன் நிவாரணச் சட்டமுன்வடிவு, 1982,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை *அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த கடன் நிவாரணச் சட்டம் கிராமப் புறங்களில், நகரப் புறங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் கடன் தொல்லையிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்ற தூய நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதாக இங்கே சொல்லப் பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

நான் ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆண்டு வருமானம் 4,800 ரூபாய்க்குக் கீழே உளளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய கடன்கள் ரத்து செய்யப்படுகின்றன, கடன் கொடுத்தவர்கள் நீதிமன்றத் திற்குப்போகமுடியாது, வழக்குப் போட முடியாது என்ற பிரிவுகளை உள்ளடக்கிய சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக் கிறது. கடன் வாங்கியவர்கள் இந்தச் சட்டத்தால் பயன் அடையவேண்டுமென்று சொன்னால் தாசில்தாரிடத்திலே அவர்கள் மனு செய்து தங்களுடைய வருமான விவரங்களை

---

*1982, செப்டம்பர் 4-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY